# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,793—1961 දෙසැම්බර් 2 වැනි සෙනසුරාදා—2.12.61

12,793 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 2 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## நானாவித பகுதிகளின் அறிவித்தல்கள்

### பிரசித்தம்

சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் கல்பொட, இனிகட ஆகிய கோறளைகளின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கல்பொட கோறளையின் 21 ஆம் இலக்க கடிகொமுவ வசமாவினதும் இனிகட கோறளையின் 9 ஆம் இலக்க கிரிவன்டேனிய வசமாவின்தும், பரணகுரு கோறளையின் 47 ஏ ஆம் இலக்க டெபத்கம வசமாவினதும் எல்லைகளுக்குள் பெரியம்மை நோய் சம்பவித்திருப்பதால், 1954, செப்ரெம்பர் 17 இன் 10,713 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் உள்ள பிரசித்தத்தால் திருத்தப்பட்டபடியான, 1925, ஓகஸ்ட் 28 இன் வர்த்தமானியில் பிரசுரமான, தனிப்படுத்தலும் நோய்த்தடையும்பற்றிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 173) கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களின் தாற்பரியப்படி தக்க அதிகாரியான கேகாலை சௌக்கிய சேவை அத்தியட்சர், செல்லையா விவேகானந்தராஜா ஆகிய நான், பின்வரும் பட்டோலையில் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை நோயுள்ள இடங்களாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

2. இப்பிரசித்தமானது, இந்த 1961 நவம்பர் 27 ந் திகதி நண்பகல் 12 மணிமுதல் நடைமுறைக்கு வந்து, அழிக்கப்படும் வரை நீடித்திருக்கும்.

3. குறித்த தொற்றுநோய்ப் பிரதேசத்தின் எப்பகுதிக்குள்ளேயும் செல்வோர் அல்லது எப்பகுதியிலுமிருந்து வெளியேறுவோர் யாவரும் அந்த இடத்தில் திருப்தியான முறையில் பால் கட்டிக்கொள்ளவேண்டும். அல்லது இத்திகதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் பால்கட்டியிருப்பதற்கான அடையாளங்களைக் காட்டுதல் வேண்டும்.

எஸ். விவேகானந்தராஜா,
செள்க்கிய சேவை அத்தியட்சர்,
கேகாலை.

சௌக்கிய சேவை அத்தியட்சர் அலுவலகம்,
கேகாலை,
1961 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந் உ.

### பட்டோலை

21 ஆம் இலக்க கடிகொமுவ வசமா : கல்பொட கோறளையிலுள்ள கொஸ்னடிவெல, ஹலகிரிய, கடிகொமுவ, மாபிற்றிய, மவிலிகே, கெம்பிற்றிய, மொடறரென்ன, நெற்றியபான, உடுகம ஆகிய கிராமங்களுட்பட்ட சகல பிரதேசத்துடன்.

9 ஆம் இலக்க கிரிவன்டேனிய வசமா : கேகாலை மாவட்டத்திலுள்ள கல்பொட, இனிகட ஆகிய கோறளைகளின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள இனிகட கோறளையிலுள்ள கப்புறுகம்பொல, கிரிவன்டேனிய, கொரிகம்மன, கொட்டகம, கொட்டனவத்த, மலகரிய, முவபிற்றிய, ஓவத்த, யொடகம ஆகிய கிராமங்களுட்பட்ட சகல பிரதேசமும்.

47 ஏ ஆம் இலக்க டெபத்கம வசமா : கேகாலை மாவட்டத்தின் பரணகுரு கோறளைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவிலுள்ள உடபகே, பல்லேபகே, கலுகல ஆகிய கிராமங்களுட்பட்ட சகல பிரதேசமும்.

12–292.


இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது